

தலைமைச் செயலகத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், ஆர்.காந்தி தலைமையில், நேற்று முன்தினம் பள்ளி சீருடை வழங்கும் திட்டம் மற்றும் துறை சார்ந்த திட்டங்களின் முன்னேற்றம் குறித்து கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, அரசு செயலாளர் திருமதி வே.அமுதவல்லி, கைத்தறி துறை இயக்குநர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், துணிநூல் துறை ஆணையர் திருமதி இரா. லலிதா, கோஆப்டெக்ஸ், மேலாண்மை இயக்குநர் திருமதி. கவிதா ராமு மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் 130வது பிறந்த நாளை முன்னிட்டு, நேற்று (23.01.2026) சென்னை காமராசர் சாலையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்குக் கீழ் வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு தமிழ்நாடு அரசின் சார்பில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தித்துறை கூடுதல் இயக்குநர் இரா.பாஸ்கரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

### கும்மிடிப்பூண்டி தொகுதி

# ஊத்துக்கோட்டை பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்துக!

## சட்டப் பேரவையில் கும்மிடிப்பூண்டி டி.ஜெ.கோவிந்தராஜன் வலியுறுத்தல்!

சென்னை, ஜன. 24 - சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது கும்மிடிப்பூண்டி தொகுதி உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் கேட்ட கேள்வியும், அக்கேள்விக்கு அமைச்சர் கே.என்.நேரு அளித்த பதிலும் வருமாறு:

**டி.ஜெ. கோவிந்தராஜன்:** கும்மிடிப்பூண்டி தொகுதி, ஊத்துக்கோட்டை பேரூராட்சியை நகராட்சியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**அமைச்சர் கே.என். நேரு:** நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு அருகிலுள்ள ஊராட்சிகளை நகர்ப்புற உள்ளாட்சிகளோடு இணைப்பது குறித்து அமைக்கப்பட்ட மாநில அளவிலான குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், பேரூராட்சிகளின் அருகிலுள்ள ஊராட்சிகளை இணைத்து நகராட்சிகளாகத் தரமுயர்த்துவது குறித்த நடவடிக்கை அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. மேற்படி கும்மிடிப்பூண்டி தொகுதி, ஊத்துக்கோட்டை பேரூராட்சியை நகராட்சியாகத் தரமுயர்த்துவது குறித்த கோரிக்கையும் அக்குழுமுன் பரிசீலனையில் வைக்கப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டி.ஜெ. கோவிந்தராஜன்:** பெருகிவரும் மக்கள்தொகையை கணக்கில் எடுத்து, வரக்கூடிய காலங்களில் கும்மிடிப்பூண்டி பேரூராட்சியையும், ஊத்துக்கோட்டை பேரூராட்சியையும் தரமுயர்த்தி நகராட்சியாக மாற்றித் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, பெருகிவரும் மக்கள்தொகை காரணமாக குடி தண்ணீர் பிரச்சினை அதிகமாக வரும் நிலையில் இருக்கிறது. அதனை கணக்கில்கொண்டு, அருகிலுள்ள கண்ணன்கோட்டை, தேர்வாய் கண்டிகை ஏரியிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்



வாயிலாக கும்மிடிப்பூண்டி, ஊத்துக்கோட்டை பேரூராட்சிகளுக்கு குடிநீர் வசதி செய்து தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

**அமைச்சர் கே.என். நேரு:** நகராட்சியாகத் தரமுயர்த்துவதில் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. அதற்கு தகுந்த வருவாய் இருக்குமானால், அந்தப் பணியைச் செய்யலாம். இரண்டாவது, அருகிலுள்ள ஊராட்சிகளைப் பேரூராட்சியோடு இணைத்து, அதனை நகராட்சியாகத் தரமுயர்த்துவது என்பது அந்தக் குழுவின் பரிசீலனையில் இருக்கிறது. பெரும்பகுதியான இடங்களில், ஊராட்சிகள் பேரூராட்சியாகவும், நகராட்சியாகவும் தரமுயர்த்தினால் 100 நாள் வேலைவாய்ப்பு திட்டம் நின்றுவிடும் என்ற அடிப்படையில் மக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாக, அதனை நிறுத்தி வைத்து பரிசீலித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். மிகவும் அவசியம், தேவையான இடங்களில் தரமுயர்த்தலாம் என்று பரிசீலனையில் இருக்கிறது. எனவே, அந்தப் பேரூராட்சி எல்லைக்குள்ளாக நகராட்சியாகத் தரமுயர்த்தவதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. இதுபற்றி உறுப்பினர் அவர்களோடு, நேராக பேசி பரிசீலிக்கலாம். மேலும், மீஞ்சூர், கும்மிடிப்பூண்டி ஆகிய பகுதிகளில் குடிநீர்த் திட்டம் என்பது, ஏற்கெனவே இருந்த கடல் நீரை குடிநீராக்கும் திட்டம். அந்தத் திட்டம் மீஞ்சூரில் கலைஞர் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டது. அதனுடைய பொருட்கள் எல்லாம் சேதம் அடைந்துவிட்ட காரணத்தினால், அதனுடைய ஒப்பந்தக்காரர்கள் அந்தப் பணிகளை சரியாக நிறைவேற்றாமல், 100 MLD தண்ணீர் தரக்கூடிய இடத்தில் 20 MLD அல்லது 30 MLD தண்ணீர் கொடுத்து--அவரும் நீதிமன்றம் சென்று, நீதிமன்றத்தில் அவரை தவிர்த்துவிட்டு, நேரடியாக அரசே எடுத்து அந்தப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது. அது TRIAL-ல் இருக்கிறது.

---

விரைவிலே அந்தப் பணிகள் முடிகிறபோது அந்தப் பகுதியிலே மீண்டும் குடிநீர் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படும். அதற்கிடையில் தேர்வாய் கண்டிகையிலிருந்து 32 கிலோமீட்டருக்கு PIPELINE போட வேண்டுமென்று தெரிவித்து, அப்படி வருகின்றபோது, கும்மிடிப்பூண்டி அதை சுற்றியிருக்கின்ற பகுதிகள், மீஞ்சூர் பகுதிகளில் குடிநீரைக் கொண்டுவருவதற்காக ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. அப்பணிகளை ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாக செய்கிறோம் என்று தெரிவித்து, அவர்கள் அப்பணிகளை எடுத்திருக்கிறார்கள். எனவேதான், நேரடியாக தேர்வாய் கண்டிகையிலிருந்து தண்ணீர் கொண்டுவருகின்ற பகுதிகள் அனைத்தும் ஊரக பகுதிகளாக இருக்கின்ற காரணத்தால் அவர்கள் அத்துறையில் அதனை செய்வதற்காக எத்தனித்திருக்கிறார்கள். இதற்கிடையில் தற்போது செம்பரம்பாக்கம் ஏரியில் புதிய பைப்லைன்களை அமைத்து, ஏரியினுடைய கொள்ளளவை கிட்டத்தட்ட 240 MLD-லிருந்து தண்ணீரின் அளவை தற்போது, 540 MLD அளவுக்கு உயர்த்தியிருக்கிறார்கள். அவ்வாறு பைப்லைன்களை அமைத்திருக்கின்ற காரணத்தால் அருகில் இருக்கின்ற ஆவடி போன்ற நகரங்கள், பூந்தமல்லி, அதேபோல அருகிலிருக்கின்ற நகராட்சிகளோடு பைப்லைன்களை இணைத்து எல்லைவரை கொண்டு வருகின்ற திட்டம் தற்போது புதியதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே, செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து தற்போது கூடுதலாக 250 MLD தண்ணீர் பெறப்படுகின்ற காரணத்தால், அருகிலிருக்கின்ற நகரங்களை நோக்கி, இந்தத் தண்ணீரைத் திருப்பிவிட, முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதிலே ஒரு பகுதியாக அருகிலுள்ள உங்கள் பகுதிக்கும் அதை கொண்டு வந்து சேர்ப்பதற்குரிய விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. எனவே, உறுப்பினர்கள் அவர்கள் தெரிவித்தவாறு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டி.ஜெ. கோவிந்தராஜன்:** அமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். கும்மிடிப்பூண்டி, ஊத்துக்கோட்டை பேரூராட்சியினுடைய மக்கள் தொகை கூடுதலாக இருப்பதால், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கும்மிடிப்பூண்டி பேரூராட்சியில் அமைக்கப்பட வேண்டும். கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படாததால், அருகிலுள்ள ஏரிகள் மற்றும் குளங்களில் கழிவு நீர் கலப்பதால் இப்பகுதிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறது. ஆகவே, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமும், அதேபோல திடக்கழிவு மேலாண்மை நிலையமும் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஊத்துக்கோட்டை பேரூராட்சியானது, 15 வார்டுகளை உள்ளடக்கிய வளர்ந்துவரும் பேரூராட்சியாகும். இங்கு 15,000-க்கும் அதிகமான எண்ணிக்கையில் மக்கள் வசிக்கிறார்கள். ஆகவே, இங்கு திடக்கழிவு மேலாண்மை நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்றும், ஊத்துக்கோட்டை பேரூராட்சிக்குட்பட்ட 13-வது வார்டில் 1991-1992 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 76 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. இந்த வீடுகள் 35 ஆண்டுகள் கடந்த நிலையில் பழுதடைந்திருக்கின்றன. அவற்றை ஏதாவது ஒரு திட்டத்தின்கீழ் சீரமைத்துத் தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**அமைச்சர் கே.என். நேரு:** பொதுவாக பேரூராட்சிகளிலும், நகராட்சிகளிலும் கழிவுநீரை சுத்திகரித்து மீண்டும் அதனை நன்னீராக மாற்றி, நிலத்திடி நீரைப் பெருக்குவதற்குரிய திட்டங்களைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம். மழைநீர் வடிகால்களை அமைத்து வருகிறோம். அதேபோன்று, கழிவு நீர் வடிகால்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. எல்லா பேரூராட்சிகளிலும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தை தற்போது நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். ஒவ்வொரு இடத்திலும் கழிவுகளை காய வைத்து, அதனை உரமாக்கி மீண்டும் விவசாயத்திற்கு பயன்படுத்துகின்ற பணிகளையும் செய்து கொண்டிருக்கிறோம். ஊத்துக்கோட்டை பகுதியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் அமைக்கப்பட வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். எனவே, அதனை பரிசீலித்து, அதிகாரிகளோடு ஆலோசித்து, இதுகுறித்து வலியுறுத்தி, அந்தப் பகுதியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, அவர் குடிதண்ணீர் பிரச்சினை பற்றியும் தெரிவித்திருக்கிறார். குடிதண்ணீர் பிரச்சினை என்று வருகிறபோது, கழிவுநீரை சுத்திகரித்து மீண்டும் நிலத்தடி நீரை உருவாக்குகின்ற திட்டம்தான்- இன்றைக்கு நகராட்சி பகுதிகளிலும், பேரூராட்சிப் பகுதிகளிலும் தண்ணீரை கொடுக்கிறோம். அது சாக்கடையாக மாறி, மீண்டும் குளங்களிலே சென்றடைவதை மாற்றுவதற்காகதான், ஆங்காங்கு நீரை சுத்திகரிப்புதற்குரிய பணிகளை தொடங்கியிருக்கிறோம். அதுவும் பல இடங்களில் தொடர்ந்து நடைபெற்றிருக்கிறது. பெரிய பெரிய நகரங்களில் இப்பணிகள் முடிந்து நன்னீராக மாற்றி மீண்டும் விவசாயத்திற்கும் அல்லது தொழிற்சாலைகளிலுள்ள தோட்டப்பகுதிகளுக்கும் தந்து கொண்டிருக்கிறோம். மீண்டும் அந்தப் பணியை எல்லா இடங்களிலும் கொண்டுவருவதற்குரிய முயற்சிகளை அரசு தொடர்ந்து எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்

# ‘சொல் புதிது’ எனும் திட்டத்தின் ஒன்பதாவது கூட்டம்!

## முனைவர் ம.இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது!

*சென்னை, ஜன. 24- தமிழ்நாடு முதல்வர் அவர்கள் அளித்த நிதி உதவியில் செயற்படும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ‘சொல் புதிது’ என்னும் திட்டத்தின் ஒன்பதாவது கூட்டம் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் 21.01.26 மாலை நடைபெற்றது. இக்கூட்டத்திற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் தலைமை வகித்தார். பேராசிரியர்கள் வ. ஜெயதேவன், ஒப்பிலா மதிவாணன், பாரதிபாலன், மணவழகன், ம. இளங்கோவன், விஜயலட்சுமி இராமசாமி மற்றும் ஊடகவியலாளர் இரா. தமிழ்க்கனல் ஆகியோர் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் பின் வரும் 27 சொற்கள் இறுதி செய்யப் பெற்றன.*

*ஆங்கிலம் இறுதி செய்யப்பட்டவை விவரம் வருமாறு:-*

*OUTPLAY (VERB) விஞ்சியாடுதல், AUTOPILOT - தானோட்டி, AIR (VERB) - வானலை ஏற்றுதல், MENORAH - யூத எழுகிளை விளக்கு, MONEY PLANT - வளமைக் கொடி, HYBRID WAR - நுட்பக் கலவைப் போர், BABY CORN - சோளப் பிஞ்சு, BABY CELL - முதிரா உயிரணு, ECO PARK - சூழலியல் பூங்கா, WILD CARD - பதிலி வாய்ப்பு, KAKISTOCRACY - தகுதியிலார் ஆட்சி, HALLUCINATION - காட்சிப் பிழை, DEEP FAKE - பொய்க் காட்சி, GHOST JOB - பொய்ப் பணி, PHANTOM JOB - பொய்ப் பணி, FAKE JOB - பொய்ப் பணி, SOFT LAUNCH - பகட்டிலாத் தொடக்கம், BRAIN ROT - மூளை மழுங்கல், DIGITAL DETOX - இணையச் சுமை விடுவிப்பு, RIZZ - கவர்ச்சி, VAX - தடு மருந்து/தடுப்பு மருந்து, CRAP - அவையல் கிளவி/செயல், OSTRACISM - ஒதுக்கிவைப்பு, PUNY - சின்னஞ்சிறு, SOLIPSISM - செருக்கு, XENOPHILE - அயல் மோகம், ROOMIE - உடன் தங்குநர் ஆகிய 27 சொற்கள் கூட்டத்தில் இறுதி செய்யப்பட்டன.*




திருவொற்றியூர் கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் திராவிட பொங்கல் விழாவை முன்னிட்டு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு ஏற்பாட்டில் நடைபெற்ற மாபெரும் ஆண்கள் மற்றும் பெண்கள் கபடி போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு முதல் பரிசு 50,000, இரண்டாம் பரிசு 30,000, மூன்றாம் பரிசு 20,000, நான்காம் பரிசு 20,000 மற்றும் கோப்பை மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்கினார். இதில் குறிஞ்சி எஸ்.கணேசன், ஆர்.சி.ஆசைதம்பி, எம்.வி.குமார், ஆர்.குமரேசன், கே.பிரபாவதி, சாந்தி, டி.ஏ.ராஜ், த.கார்த்திகேயன், டி.சி.மணிகண்டன், எம்.எல்.சரவணன், எஸ்.தமிழ்செல்வன், குருத்து சி.முனுசாமி, கேபிள் டிவி எம்.ராஜா, எகா.கார்த்திகேயன், எஸ்.பாஸ்கர், ஆர்.ரஜினிபாபு, ஒய்.ரஜினிநந்தி, பி.எஸ்.சைலஸ், வி.பழனிவேல், ஆர்.டில்லி, ம.எத்திராஜ் மற்றும் மாவட்ட பகுதி அணியின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.ராமச்சந்திரன்

**சனவரி 24 (2011)**



கழகம் துவங்கிய காலம் முதல் கழகப் பணியாற்றியவர்.

வடபெரும்பாக்கம் கிளைக் கழக அவைத் தலைவராக இருபது ஆண்டுகள் பொறுப்பு வகித்தவர்.

சாலைப் பணியாளர்கள் சங்க கமிட்டி உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

# சென்னை தெற்கு மாவட்டம் - வேளச்சேரி மேற்கு பகுதி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க.விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி., அறிவிப்பு!

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்கு பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட வி. சண்முகநாதன் அவர்கள், சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி சமூக வலைதள துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக **எஸ். ஜெகதீசன்** (7/4, முதல் மெயின் ரோடு, எம்.ஜி.ஆர். நகர், வேளச்சேரி, சென்னை - 600042) அவர்கள் சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்கு பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளராகவும்;

வேளச்சேரி மேற்கு பகுதி துணை அமைப்பாளர்களாக, அ. செரின் (1832, டாக்டர் அம்பேத்கர் நகர், 71வது தெரு, வேளச்சேரி, சென்னை - 600042), ஆர். திருவேங்கடம் (16/17, லட்சுமி நகர் 3வது தெரு, வேளச்சேரி, சென்னை - 600042) ஆகியோர் நியமிக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 23-01-2026.

**தயாநிதி மாறன், எம்.பி.,**
செயலாளர்
தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கி.வே. செந்தில்குமார்

**சனவரி 24 (2010)**



இளம்பிராயத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, இரண்டு முறை கும்மிடிப்பூண்டி ஒன்றியக் கழகச் செயலாளராகப் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

திருவள்ளூர் மாவட்ட கூட்டுறவு விற்பனைச் சங்க துணைத் தலைவராகவும், காஞ்சிபுரம் – திருவள்ளூர் மாவட்ட விற்பனைக் குழு இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக ஜெ. அரசால் தலைவர் கலைஞர் கைது செய்யப்பட்ட போது, மறியலில் ஈடுபட்டதற்காக இரண்டு மாதத்திற்கும் மேலாக சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.